# தேயிலை

1. **தேயிலை கொசுப்பூச்சி : ஹீலோபைல்டிஸ் தீவோரா :**

**சேதத்தின் அறிகுறிகள் :**

- பூச்சிகள் இளங்குருத்து, இளம் இலைகள் மற்றும் இளம் தளிர்களின் சாறுகளை உறிஞ்சி சேதப்படுத்தும்
- சாறுகளை உறிஞ்சும் பொழுது பூச்சிகள் நச்சு உமிழ் நீரை உட்செலுத்தும்
- சேதப்பட்ட பகுதிகளில் கரும்புள்ளிகள் தென்படும்
- தாக்கப்பட்ட இலைகள் மேல்நோக்கி சுருங்கியிருக்கும்
- தாக்குதலுக்கு உள்ளான பகுதியின் தோல் கடினத் தன்மையடைந்த பழுப்புநிறத்திட்டாக மாறிவிடும் கருகி வாடி விடும்

**பூச்சியின் விவரம் :**

- நன்கு வளர்ந்த பூச்சியானது சிகப்பு நிறத்துடன் கருப்புநிறத்தலை மற்றும் சிகப்பு நிற மார்புப் பகுதியுடன் காணப்படும். பசுமைக் கலந்த பழுப்பு நிற இறக்கையுடன் இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறை :**

- எண்டோசல்ஃபான் அல்லது பாஸோலான் அல்லது மாணோக் குரோட்டோஃபாஸ் @ 2 மி.லி / லிட்டர் தெளிக்கவும்

2. **காவடிப்புழு : புசுரா சப்ரசேரியா**

**சேதத்தின் அறிகுறிகள் :**

- இலைகள் முழுவதும் புழுக்களால் கடித்து சேதப்படுத்தப்பட்டிருக்கும்

**பூச்சியின் விவரம்:**

- புழு: கரும்பழுப்பு நிறத்துடன் வெளிர் மஞ்சள் கலந்த வெண்ணிற கோடுகளுடன் காணப்படும்
- பூச்சி: அந்துப்பூச்சியின் சாம்பல் நிற இறகுகளில் பழுப்பு நிற வளைந்த கோடுகள் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை :**

- வேப்பம் கொட்டை வடி நீர் 5 சதம் அல்லது வேம்பு வகை பூச்சிக்கொல்லி திரவங்களை பயன்படுத்தவும்
- பின்வரும் ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லி மருந்தை தெளிக்கவும்: எண்டோசல்ஃபான் அல்லது பாஸோலான் அல்லது குளோர்பைரிஃபஸ் அல்லது மாலத்தியான் 2மி.லி / லிட்டர்

3. **லோப்ஸ்டர் புழு : நியூஸ்டாரோஃபஸ் ஆல்ட்ர்னஸ்:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- இரண்டு அல்லது மூன்று புழுக்கள் இலைகள் அனைத்தையும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் சாப்பிட்டு விடும்

**பூச்சியின் விவரம்:**

- முட்டை : வெண்ணிறத்தில் மெல்லிய கோடுகளுடன் இருக்கும்
- புழு: கருப்பாக இருக்கும், உலர்ந்த இலை போல் தோற்றமளிக்கும்

- பூச்சி: சாம்பல் கலந்த வெண்ணிற இறக்கைகள் இருக்கும். செம்பழுப்பு நிறப்புள்ளிகள் முன்இறக்கையில் இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- புழுக்களை சேகரித்து அழிக்கவும்
- தாக்குதல் அதிகமாக இருந்தால் எண்டோசல்ஃபான் @ 2 மி.லி / லிட்டர் தெளிக்கவும்

4. **இலைப்புழு : சிடியா லுயூக்கோஸ்டோமா:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- புழுக்கள் இளம் இலைகளை சுருட்டி பை போல் உருவாக்கி அதனுள் இருந்து இலையை உண்டு சேதப்படுத்தும்
- இலையின் மேற்புறத் தோலை சுரண்டி திண்ணும்
- தாக்கப்பட்ட இலைகள் கடினமாகி சுருங்கிவிடும்

**பூச்சியின் விபரம்:**

- முட்டை: வெளிர் மஞ்சள் நிறமுடையை தனித்தனியே இலையின் அடியில் இடும்
- புழு: பழுப்பு நிறமானது
- பூச்சி: அந்துப்பூச்சி சிறியது, கரும்பழுப்பு நிறமுடையது

**கட்டுப்படுத்தும் முறை:**

- எண்டோசல்ஃபான் அல்லது குளோர்பைரிஃபஸ் அல்லது பென்நைட்ரோதியான் @ 2 மி.லி / லிட்டர் தெளிக்கவும்

5. **தேயிலை டார்டிக்ஸ் : ஹோமோனா காஃபிஹரியா:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- புழுக்கள் பட்டுநூலினால் இலைகளை பிணைத்து இலைகூட்டினை உருவாக்குகிறது
- இலைக்கூட்டிலிருந்து இலைகளை சாப்பிட்டு அழிக்கும்

**பூச்சியின் விபரம்:**

- புழு: பச்சை நிறம்
- கூட்டுப்புழு: முதலில் பச்சை நிறமாக இருக்கும் பிறகு செம்பழுப்பு நிறமாக இருக்கும்
- பூச்சி: அந்துப்பூச்சி பழுப்பு நிறத்தில் இருக்கும். வெளிபுறத் தோற்றம் மனி வடிவில் இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- எண்டோசல்ஃபான் அல்லது குளோர்பைரிஃபஸ் அல்லது பென்நைட்ரோதியான் @ 2 மி.லி / லிட்டர் தெளிக்கவும்

6. **சிறு துளை வண்டு : என்வேஏசியா வாரினிகேட்டஸ்:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- தண்டில் வட்டவடிவ சிறுசிறு துளைகள் காணப்படும்

- தாக்கப்பட்ட செடியின் இளம் துளிர்கள் இறந்துவிடும் மேலும் நுணிக்குறுத்து காய்ந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- வண்டுகள் கூட்டுப்புழுக்களிலிருந்து வெளிவரும் போது பழுப்புநிறமாகவும் பின்னர் கருப்புநிறமாகவும் மாறிவிடும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- சேதமுற்ற தண்டுகளை வெட்டி சேகரித்து அழிக்கவேண்டும்
- குளிர்காலங்களில் கவாத்து செய்வதை தவிர்க்க வேண்டும்
- லிண்டேன் 2மி.லி மருந்தை 1 லிட்டர் நீரில் கலந்து கவாத்து செய்தவுடன் தெளிக்கவும்

7. **பயிர்ச்சிலந்தி வகைகள்:**

**1.சிவப்புச்சிலந்தி : ஒலிகோநிக்கஸ் காஃபியே:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- முதிர்ந்த இலையின் மேற்பரப்பில் சாறு உறிஞ்சும்
- சாறு உறிஞ்சுவதால் இலைகள் இளம் பழுப்பு நிறமாகி சுருண்டு வாடிக் காணப்படும்

**பூச்சியின் விபரம் :**

- கோள வடிவ சிவப்பு நிற முட்டை
- பெண் செதிள்பூச்சி வயிறு பகுதி கரும் பழுப்பு நிறமானது, தலைபகுதி செந்நிறத்தில் இருக்கும்

**2. ஸ்கார்லெட் சிலந்தி : ப்ரெவிபால்பஸ் ஆஸ்ட்ராலிஸ்:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- இலைகள் பழுப்பு நிறமாகிவிடும்

**பூச்சியின் விபரம்:**

- முட்டை: உருண்டை வடிவ சிவப்பு நிற முட்டைகள் குவியலாக இலையின் அடிப்பாகத்தில் காணப்படும்
- சிலந்தி: சிவப்பு நிறத்தில் இருக்கும்

**3. ஊதாச் சிலந்தி : கலக்கேரஸ் கேரினேட்டஸ்:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- இலைகள் கரும்பழுப்பு நிறமாகி விடும்
- அஸ்ஸாம் தேயிலை வகை எளிதில் தாக்ககூடியது

**பூச்சியின் விபரம் :**

- ஊதாநிறத்தில் இருக்கும்
- முதுகுப்பகுதியில் நீளவாக்கில் 5 வெண்ணிறக் கோடுகள் இருக்கும்

**4. இளஞ்சிவப்புச் சிலந்தி : அக்கேள்பில்லா தியே:**

**சேதத்தின் அறிகுறிகள் :**

- சிலந்தியின் தாக்கம் நுணியிலிருந்து இரண்டு மூன்று இலைகள் மற்றும் இளம் தளிர்களில் அதிகமாக இருக்கும்
- இளந்தளிர்கள் தோல் போல் கடினமாகி பின்னர் வாடிக் காணப்படும்
- இலைகள் அடிபுறமாக சுருண்டு காணப்படும்

- இடைக்கணுக்கள் குறுகிவிடும்
- செடிகள் வளர்ச்சிக் குன்றிக் காணப்படும்

**பூச்சியின் விபரம் :**

- ஆண் சிலந்தி சிறியது, வெளிர் மஞ்சள் நிறத்தில் இருக்கும்
- பெண் சிலந்தி மஞ்சளானது, ஆணை விட சிறியது

**சிலந்திகளை கட்டுப்படுத்தும் முறைகள்:**

- 1 லிட்டர் நீருக்கு டைகோஃபால் 2 மி.லி அல்லது எதியன் 2 மி.லி அல்லது மானோகுரோட்டோஃபாஸ் 1 மி.லி தெளிக்கவும்
- 1 லிட்டர் நீருக்கு நனையும் 2 கிராம் கந்தக தூள் தெளிக்க வேண்டும்

8. **இலைப்பேன் : சிர்ட்த்ரிபஸ் பைஸ்பைனோசல்:**

**சேதத்தின் அறிகுறிகள் :**

- இளந்தளிர்கள் லேசாக சுரண்டப்பட்டு சாறு உறிஞ்சிப் படுவதால் செடி வாடிக் காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- இலைப்பேன் வயிறு பழுப்பு நிறமாக இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி டைமீதோயேட் அல்லது குளோர்பைரிஃபாஸ் தெளிக்கவும்

9. **அசுவிணி : டாக்சாப்டிரா ஔரான்சி:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- இலைகள் சுருங்கி விடும்
- செடியின் வளர்ச்சி குன்றி விடும்
- பூச்சியின் சேதாரம் கவாத்து செய்ததற்கு பிறகு அதிகமாக இருக்கும்
- அசுவிணிகளுடன் எறும்புகள் காணப்படும்
- அசுவிணிகள் தேன் போன்ற கழிவுப்பொருளை வெளியேற்றுவதால் கரும்புகை பூசணம் ஏற்படும்

**பூச்சியின் விபரம்:**

- அசுவிணிகள் கரும்பழுப்புநிறமாக இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- செடியின் தாக்கப்பட்ட பகுதியை சேகரித்து அழிக்கவும்
- ஒரு லிட்டர் தண்ணீரில் டைமீதோயேட் அல்லது குளோர்பைரிஃபாஸ் அல்லது எண்டோசல்ஃபான் அல்லது பாசலோன் 2 மி.லி கலந்து தெளிக்கவும்